Tsi8T

**தென்காசி மாவட்டம்**

**காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2023**

19-09-2023

**வகுப்பு 8**

**தமிழ்**

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (மதிப்பெண்கள் : 20)**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**

1) தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ................. காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

2) வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் .................
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

3) 'நன்செய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................
அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்

4) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ................. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

5) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் .................
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

6) உடல்நலம் என்பது ................. இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

7) இடம்+எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................
அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும் இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்

8) தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ................. நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

9) முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ................. எனப்படும்.
அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

10) கற்றவருக்கு அழகு தருவது .................
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5×1=5**

11) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................. என அழைக்கப்பட்டன.

12) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .................

13) வலியில் நிலைமையான் வல்லுருவம் .................
புலியின்தோல் ................. மேய்ந்தற்று.

14) 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

15) சமையலறையில் செலவிடும் நேரம் ................. செலவிடும் நேரமாகும்.

**பொருத்துக:** **5×1=5**

16) நடந்து - முற்றெச்சம்
17) பேசிய - குறிப்புப் பெயரெச்சம்
18) எடுத்தனன் உண்டான் - பெயரெச்சம்
19) பெரிய - வினையெச்சம்
20) மெல்ல வந்தான் - குறிப்பு வினையெச்சம்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 22)**

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** **4×2=8**

21) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
22) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
23) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
24) நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
25) யாருடைய உள்ளம் மாணிக்கக்கோயில் போன்றது?

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** **4×2=8**

26) ஓவிய எழுத்து என்றால் என்ன?
27) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



28) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

29) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்யவேண்டியவை யாவை?

30) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க:** **3×2=6**

31) மெய்எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

32) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

33) 'அழகிய மரம்' - எச்ச வகையை விளக்குக.

34) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 16)

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** **4×4=16**

35) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

36) புத்தியைத் தீட்டி வாழவேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

37) நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

38) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

39) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

40) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 8)

**அடிமாறாமல் எழுதுக:** **4+4=8**

41) ''உடலின் உறுதி'' எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடலை எழுதுக.

42) ''கணைகொடிது'' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

43) ''இறைக்கு'' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** **3×8=24**

44) அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45) அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' இக்கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றி தொகுத்து எழுதுக.

46) அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:
முன்னுரை - நோய்வரக் காரணங்கள் - நோய்தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

## பகுதி - VI (மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க:** **5×2=10**

47) **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) கோழி ............. (கூவும் / கொக்கரிக்கும்)

ஆ) பால் ............... (குடி / பருகு)

சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம்-627809.
தென்காசி மாவட்டம்.

48) **கலைச்சொல் தருக:**

அ) Lexicography

ஆ) Antibiotic

49) **தொடர்களை மாற்றுக:**

அ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. **(வினாத்தொடராக மாற்றுக)**

ஆ) காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சித் தொடராக மாற்றுக)**

50) **உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க:**

அ) வேலியே பயிரை மேய்ந்தது போல.

ஆ) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல

51) **தமிழ் எண்களை எழுதுக:**

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ................

ஆ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3 ................

Kindly send me your study materials to padasalai.net@gmail.com